# பத்திரிக்கைச் செய்தி

## பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை வழங்க லஞ்சம் ரூ.2,000/- கேட்டு பெற்ற சார்பதிவாளர் கைது

புகார்தாரர் திரு.சரவணன், மாரியம்மன் கோவில் 6வது தெரு, கொளத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய பூர்வீக சொத்தான 1098 சதுர அடி நிலம் கோவிலம்பாக்கத்தில் உள்ளது. புகார்தாரரின் தந்தை கடந்த 2013ம் ஆண்டு இறந்தபோது புகார்தாரர் 13 வயதுடையவராக இருந்த காரணத்தினால் இந்த சொத்தானது பட்டாவில் புகார்தாரரின் பெயரும் அவருடைய தாயாரின் பெயரும் (Guardian) இருந்தது. தற்போது புகார்தாரரின் சகோதரியின் திருமணத்திற்காக சொத்தினை வங்கியில் அடமானம் வைக்க சென்றபோது வங்கியில் செட்டில்மெண்ட் பத்திரத்தில் பெயரை மாற்றி வரும்படி கோரியுள்ளனர். எனவே புகார்தாரர் 28.03.2023ம் தேதி பல்லாவரத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பெயர் மாற்றம் செய்ய சார்பதிவாளர் திரு.செந்தில்குமார், அவர்களை சந்தித்துள்ளார். அப்போது திரு.செந்தில்குமார், சார்பதிவாளர், பத்திரத்தில் பெயர் மாற்றம் செய்து தர தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். பின்னர் லஞ்ச பணத்தை ரூ.2,000/-மாக குறைத்துக் கொண்டார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், சென்னை லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 29.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு. திரு.செந்தில்குமார், சார்பதிவாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திரு.சிவக்குமார், தனிநபர் லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

# PRESS NOTE

## SUB REGISTRAR ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE OF RS.2000/- FOR GIVING THE REGISTERED SETTLEMENT DEED

The complainant Tr.S.Saravanan S/o Selvam is residing at No.5/486, Mariyamman Koil 6th Street, S.Kolathur, Kovilambakkam, Chennai-129. He has ancestral property of 1098 sq.ft of land at S.Kolathur, Kovilambakkam. His father expired in the year 2013. At that time, he was only 13 years old. Hence, Patta No.681 was issued in his name with his mother as guardian. For the purpose of his sister's marriage, they had borrowed money from private persons. To repay the loan, the complainant had approached bank for loan. For which, they asked for registered documents. Hence, the complainant executed settlement deed in the name of his mother Tmt.Alamelu at SRO, Pallavaram on 28.03.2023 between 13.00 to 13.30hrs. At that time, the incharge Sub Registrar Tr.C.Senthilkumar had initially demanded bribe of Rs.5,000/- and later reduced to Rs.2000/- and asked the complainant to receive the settlement document on 29.03.2023 at 12.00hrs after giving the bribe amount. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Chennai Unit and gave complaint. In this connection a case was registered and a trap was organized on 29.03.2023. During the trap proceedings, Tr.C.Senthilkumar, incharge Sub Registrar reiterated his earlier bribe demand of Rs.2,000/- and received bribe through one private individual Tr.Sivakumar. Both Tr.Sivakumar and Tr.Senthilkumar, were arrested and remanded to judicial custody.